சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி
முன்னிலை: **திருமதி.P மோகனவள்ளி, B.A., M.L.,**
சார்பு நீதிபதி பொள்ளாச்சி
2024 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20 ஆம் நாள் வெள்ளிக்கிழமை
(2055 திருவள்ளுவராண்டு குரோதி வருடம் புரட்டாசி திங்கள் 04ம் நாள்)
இடை மனு எண்.1/2023
–in–
அசல் வழக்கு எண்.417/2023

துரைசாமி, த/பெ. செல்வகுமாரசாமி கவுண்டர், இந்து, வயது 30, வசிப்பிட முகவரி பொன்மலையூர் களம், ராமபட்டிணம் அஞ்சல், பொள்ளாச்சி தாலூக்கா.

.. மனுதாரர் / வாதி

/எதிர்/

P. ரத்தினசாமி, த/பெ. பரமசிவ கவுண்டர், இந்து, வயது 33, வசிப்பிட முகவரி செடிமுத்தூர், மண்ணூர் அஞ்சல், பொள்ளாச்சி தாலூக்கா.

.. எதிர்மனுதாரர் / 2ம் பிரதிவாதி

இம்மனுவானது உரிமையியல் நடைமுறை சட்டம் வகுமுறை 38 விதி 5ன் கீழ் மனுதாரர், எதிர்மனுதாரருக்கு தக்க ஜாமீன் உடனடியாக ஒப்படைக்கும் படியும் இல்லாவிடில் மனுச்சொத்துக்களை மேற்படி அசல் வழக்கின் தீப்புக்கு முன் ஜப்தி செய்து உத்தரவிட்டும் இம்மனுவின் விசாரணை முடியும் வரை இடைக்கால முன் ஜப்தி செய்ய உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் செய்த நாள் 02.12.2023

இம்மனுவானது, கடந்த 10.09.2024ஆம் தேதியன்று இறுதியாக என் முன்பு விசாரணைக்கு வரப்பெற்றபோது, மனுதாரர்/வாதிக்காக வழக்கறிஞர் திரு.S.சுந்தரராஜ் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்காக வழக்கறிஞர் திரு.V.லிங்குராஜ் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு ஆவணங்களை பரிசீலனை செய்தும், வாதுரைகளைக் கேட்டறிந்தும், இதுநாள்

வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

<u>இறுதி உத்தரவு</u>

1. முடிவாக மனுவானது அனுமதிக்கப்பட்டு உத்திரவிடப்படுகிறது.

2. மனுச்சொத்தை பற்றுகை செய்ய வாய்தா 18.12.2024.
படி கட்ட வாய்தா 2 நாட்கள்.

## DESCRIPTION OF PROPERTY

கோயமுத்தூர் பதிவு மாவட்டம், பொள்ளாச்சி சார்பதிவு வட்டம், பொள்ளாச்சி தாலூக்கா, இராமபட்டிணம் கிராமம் மஜரா செடிமுத்தூர் நத்தம் க.ச.125 நெ. காலை ஊர்க்கட்டில் நத்தம் புதிய புல எண்.458/9ல் 190 சதுர மீட்டர் விஸ்தீரணமுள்ள இடமும், ஷை இடத்திற்குண்டான சகல பாத்தியங்களும் சகிதம். எல்லை விபரங்கள்

தெற்கு பகுதி – ஈஸ்வரசாமி வீடு

வடக்கு பகுதி – சரவணகுமார் இடம், பொது தடம்

கிழக்கு பகுதி – ராஜ்குமார் பொன்னம்மாள் இடம்

மேற்கு பகுதி – ஆறுமுக கவுண்டர் வகையறா வீடு

இன்று 2024ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 20ம் நாள் என் கையொப்பமும் இந்நீதிமன்ற முத்திரையுடன் வழங்கப்பட்டது.

**ஒப்பம்/–(P.மோகனவள்ளி)**
**சார்பு நீதிபதி, பொள்ளாச்சி.**